பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**02 12 2025** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

***தலைப்புச் செய்திகள்***

1. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2. வரும் 2027-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. சாகர்மாலா திட்டத்தின்கீழ், தமிழகத்தில் ஆயிரத்து 343 கோடி ரூபாய் மதிப்பிலான 24 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் கூறியுள்ளார்.

4. ராணுவ தளவாடங்களின் ஏற்றுமதி வரும் 2029-ஆம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாயை எட்டும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

5. **Ditwah** புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட இலங்கையில் ஆப்பரேஷன் சாகர்பந்து மூலம் மீட்புப் பணிகளில் இந்திய விமானப்படை ஈடுபட்டுள்ளது.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நாளை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மக்களவை இன்று கூடியதும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டதால், அவை முதலில் நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை கூடியபோதும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையின் மையப்பகுதிக்கு சென்று தொடர்ந்து அமளியில் ஈடுபட்டனர்.

அவையின் செயல்பாடுகளை முடக்கும் நடவடிக்கையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஈடுபடக்கூடாது என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ வலியுறுத்தினார்.

தொடர்ந்து அமளி நீடித்ததால் மக்களவை இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, விதி 267-ன்கீழ் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

திமுக உறுப்பினர் திருச்சி சிவாவும் இதே கோரிக்கையை முன்வைத்தார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதுகுறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர்.

அவர்களின் கோரிக்கை ஏற்படாததையடுத்து, வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

<<<<<<>>>>>>

வரும் 2027-ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடைபெறும் என்று மத்திய உள்துறை இணையமைச்சர் திரு நித்யானந்த ராய் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து பேசிய அவர், முதல்கட்டமாக அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல், செப்டம்பர் மாதம் வரையிலும், இரண்டாவது கட்டம் 2027-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திலும் நடைபெறவுள்ளதாக கூறினார்.

முதல் கட்டத்தில் வீடுகளுக்கு இலக்கமிடும் பணி நடைபெறும் என்றும், அதைத் தொடர்ந்து இரண்டாவது கட்டத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறும் என்றும் திரு நித்யானந்த ராய் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், இதுவரை **68** ஆயிரத்து **393** கோடி ரூபாய் மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலம் அளித்த பதிலில், **57** ஆயிரத்து **853** கோடி ரூபாய் ஊதியமாகவும், **10** ஆயிரத்து **540** கோடி ரூபாய் உபகரணங்கள் வாங்குவதற்கும், நிர்வாக செலவினத்திற்கும் வழங்கப்பட்டதாக கூறியுள்ளார்.

இந்த திட்டத்தின்கீழ், ஊதியம் பயனாளிகளின் வங்கிக்கணக்குகளில் நேரடியாக செலுத்தப்படுவதாக திரு சிவ்ராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சாகர்மாலா திட்டத்தின்கீழ், ஆயிரத்து 343 கோடி ரூபாய் மதிப்பிலான 24 திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மத்திய துறைமுகங்கள் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்துமூலம் பதிலளித்த அவர், சென்னை மீன்பிடி துறைமுக நவீன மயமாக்கல் திட்டத்திற்கு இதுவரை 48 கோடியே 97 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத்திட்டத்தில் இதுவரை 20 ஆயிரத்து 50 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருப்பதாக மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் அவர் இன்று அளித்த எழுத்துப்பூர்வமான பதிலில், சமூக பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், மீனவர்கள், மீன்பிடி தொழிலாளர்கள் ஆகியோருக்கான குழு காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் விபத்துக்குள்ளாகும் மீனவர்கள் உயிரிழந்தால் ஐந்து லட்சம் ரூபாயும், உடல் உறுப்புகள் செயலிழந்திருந்தால் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரையிலும் காப்பீடு பெறலாம்.

விபத்தில் காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றுவரும் மீனவர்களுக்கு பிரதமரின் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 25 ஆயிரம் ரூபாய் மருத்துவ செலவினங்களுக்காக வழங்கப்படும் என்றும் திரு ராஜீவ் ரஞ்சன் சிங் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

கடந்த நிதியாண்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள சுயஉதவிக்குழுக்களுக்கு 173 கோடி ரூபாய் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக ஊரக வளர்ச்சித்துறை இணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் பெம்மசாணி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று அவர் அளித்த எழுத்துப்பூர்வமான பதிலில், இதுவரை 50 ஆயிரத்து 720 குடும்பங்கள் கடனுதவி பெற்றுள்ளதாக கூறியுள்ளார்.

சுயஉதவிக்குழு உறுப்பினர்களின் கடன் விண்ணப்பங்களை வங்கிகள் உடனுக்குடன் பரிசீலித்து கடனுதவி வழங்கி வருவதாகவும் டாக்டர் சந்திரசேகர் பெம்மசாணி தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டத்தின்கீழ், ஏழு பூங்காக்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு பபித்ரா மார்கரேட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில இன்று கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதிலில், பிரதமரின் மித்ரா பூங்கா திட்டம் மூலம், 3 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ராணுவ தளவாடங்களின் ஏற்றுமதி வரும் 2029-ஆம் ஆண்டுக்குள் 50 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு எட்டக்கூடும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் வதோதராவில் சர்தார் பட்டேலின் வாழ்க்கை வரலாறு குறித்த நிகழ்ச்சியில் பேசிய அவர், ராணுவ தளவாடங்களின் உற்பத்தி மூன்று லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறினார்.

சர்தார் பட்டேலின் தேசிய பாதுகாப்பு கொள்கையை மத்திய அரசு முன்னெடுத்துச் செல்வதாக கூறிய திரு ராஜ்நாத் சிங், ராணுவ தளவாடங்களின் உற்பத்திக்கும் இத்துறையில் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிவித்தார்.

சர்தார் வல்லப்பாய் பட்டேலின் கொள்கைக்கு ஏற்ப இந்தியா தீவிரவாதத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது தீவிரவாதத்திற்கு எதிராக நமது முப்படை வீரர்களின் செயல்பாடு பாராட்டுதலுக்குரியது என்று திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

ஆப்பரேஷன் சாகர்பந்து மூலம், **Ditwah** புயலால் பெரிதும் பாதிக்கப்பட்ட இலங்கையில் மீட்புப் பணிகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது.

இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர்கள் மூலம், கொழும்புவிலிருந்து புயலால் பாதிக்கப்பட்ட **Mandaram Nuwara**-வில் 2 ஆயிரம் கிலோ நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது.

பின்னர், **Irunguwatta** கிராமத்திலிருந்து மாரடைப்பால் பாதிக்கப்பட்ட ஒருவர் உட்பட **17** பேரை பத்திரமாக, **Matale** பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

**Kotmale** பகுதியிலிருந்து, கர்ப்பிணி பெண்கள் உட்பட **24** பேரை இந்திய விமானப்படை வீரர்கள் பத்திரமாக மீட்டுள்ளனர்.

இந்திய விமானப்படையின் ஹெலிகாப்டர் மூலம் **2** ஆயிரம் கிலோ நிவாரணப் பொருட்களை **Poramadulla** பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மீட்புக் குழு, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட **Sedawatte** பகுதியிலும், நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட **Badulla** பகுதியிலும் தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

இலங்கையில் **Ditwah** புயலால் ஏற்பட்ட மழை வெள்ளம் மற்றும் மண் சரிவினால் உயிரிழந்தோர் எண்ணிக்கை **410-**ஆக அதிகரித்துள்ளது.

மேலும், காணாமல் போன **336** பேரை தேடும் பணி நடைபெற்று வருவதாக அந்நாட்டு பேரிடர் மேலாண்மை மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக **25** மாவட்டங்களை சேர்ந்த, **14** லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகம், கேரளா உள்ளிட்ட **9** மாநிலங்களிலும், **3** யூனியன் பிரதேசங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின்கீழ், இதுவரை **50** கோடியே **85** லட்சம் விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுமார் **51** கோடி வாக்காளர்கள் உள்ள நிலையில், **99** புள்ளி ஏழு எட்டு சதவீதம் பேருக்கு படிவங்கள் வழங்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இவற்றில், **40** கோடி படிவங்கள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைய அறிக்கை தெரிவிக்கிறது.

கடந்த மாதம் **4-**ஆம் தேதி தொடங்கிய இந்த பணிகள், வரும் **11-**ஆம் தேதிவரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை தற்போதும் நடைமுறையில் உள்ளதாக இந்திய கடற்படை தளபதி அட்மிரல் தினேஷ் திரிபாதி தெரிவித்துள்ளார்.

இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ராணுவ ரீதியிலான எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள முப்படைகளும் தயார் நிலையில் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

குவாலியரில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Aryan Shah — Atharva Sharma** இணையும், **Aryan Lakshmanan - Manish Sureshkumar** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் அபினவ், **Sarthak, Hitesh, Raghav** ஆகியோர் வெற்றிபெற்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

---------------

உலகக் கோப்பை ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று ஸ்விட்சர்லாந்தை எதிர்கொள்கிறது.

மதுரையில் இப்போட்டி இரவு **8** மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**